# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051816

1. District : மாவட்டம் **கடலூர்** | PS காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** | Year ஆண்டு **2020** | FIR No. மு.த.அ. எண் **15/2020** | Date நாள் **28.12.2020**

2. (i) Act சட்டம்: **Indian Penal Code** — Sections பிரிவுகள்: **409, 420**
   (ii) Act சட்டம்: **The Prevention of Corruption** — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: **(Amendment) Act 2018** — Sections பிரிவுகள்: **13(2) r/w 13(a)**
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் **2013** — Date to : நாள் வரை **2014**
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **08.03.2019** — Time : நேரம் **1100 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** — Time : நேரம் **1100 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 30 கி.மீ. மேற்கு**
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி **வக்ஃப் வாரிய அலுவலகம், கடலூர் சரகம், பண்ருட்டி.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.மாலா** — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **சேகர்**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality நாட்டினம் **இந்தியன்** — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —— — Place of Issue : வழங்கப்பட்ட இடம் ——
   (f) Occupation : தொழில் **காவல் ஆய்வாளர்,** — (g) Address : முகவரி **ஊ.த.க. பிரிவு கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **1) R.அன்வர்தீன், த/பெ ரஹமான் ஷெரிப், வக்ஃப் ஆய்வாளர், வக்ஃப் வாரிய அலுவலகம், பண்ருட்டி.**

   **2) A.லியாகத் அலி, த/பெ அப்துல் ஹமீது, வக்ஃப் கண்காணிப்பாளர், வேலூர் சரகம். (முன்னாள் வக்ஃப் கண்காணிப்பாளர், கடலூர் சரகம், பண்ருட்டி.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **முதல்நிலை விசாரணை நடத்தப்பட்டது. (PE 14/2019/WAKF/CL)**

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

——

10. Total value of properties stolen / involved : ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ——
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ——
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு.ஜாகிர் உசேன், த/பெ அபுபக்கர், No.31/15,சிங்காரதோப்பு, விழுப்புரம் மற்றும் திரு.முகமது ஜியாவுதின் ஆகியோர்கள், தங்களது புகார் மனுக்களை முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி புகார் மனுக்கள் மீது விசாரணை நடத்தி அறிக்கை அளிக்குமாறு இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை அவர்கள் 26.02.2019 ஆம் தேதி கடிதம் அனுப்பி உள்ளார். மேற்படி திரு.ஜாகிர் உசேன் மற்றும் திரு.முகமதுஜியாவுதின் ஆகியோர்களது புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரக உத்தரவு PE 14/2018/WAKF/CL நாள் 05.03.2019–ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதல்நிலை விசாரணை பதிவு செய்யப்பட்டு, மேற்படி புகார் மனுக்களில் சொல்லப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் மீது, விசாரணை அலுவலரான S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Mala 28/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.12.2020 at 16.30 hrs.

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of police, V&AC, Cuddalore. No. எண்

மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் ஆகிய என்னால் விசாரணை செய்யப்பட்டு, விசாரணையின் முடிவில் குற்றச்செயலுக்கான முகாந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, குற்ற வழக்கு பதிவு செய்ய முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

விசாரணையின் விபரம் பின்வருமாறு

குற்ற அலுவலர்–1 திரு.S.அன்வர்தீன், வக்ஃப் ஆய்வாளர், கடலூர் சரகம் மற்றும் குற்ற அலுவலர்–2 திரு.A.லியாகத் அலி, வக்ஃப் கண்காணிப்பாளர், வேலூர் சரகம் (முன்னாள் வக்ஃப் கண்காணிப்பாளர், கடலூர் சரகம்) ஆகியோர்கள் சட்டப்பிரிவு 2(C) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சட்டம் 1988(அமல்படுத்தப்பட்ட சட்டம்) 2018 ன் படி பொது ஊழியர்கள் ஆவர்.

(1) கடந்த 2014 ஆம் வருடம், கோட்டக்குப்பத்தில் உள்ள ஜாமியா மஸ்ஜித்தில்(பள்ளிவாசல்) இருந்த பழைய நிர்வாக குழு உறுப்பினர்களை மாற்றிவிட்டு புதிய நிர்வாக குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக, வக்ஃப் வாரியம் தலைமை அலுவலக உத்தரவுபடி, கடலூர் சரக வக்ஃப் கண்காணிப்பாளரால் தேர்தல் நடைபெறுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக குழு தேர்தலில் போட்டியிடுவதற்காக, 04.06.2014 ஆம் தேதி பண்ருட்டியில் உள்ள கடலூர் சரக அலுவலகத்தில் வக்ஃப் ஆய்வாளர் அன்வர்தீனிடம் 5 நபர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்தும், அதற்குரிய கட்டணமாக தலா ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.50,000/– செலுத்தியுள்ளார்கள். வக்ஃப் ஆய்வாளர் அன்வர்தீன் பணத்தினை பெற்றுக்கொண்டு, ரசீதில் கையொப்பமிட்டு வழங்கியுள்ளார். வக்ஃப் ஆய்வாளர் அன்வர்தீன் அவர்கள் மேற்படி தொகையினை தேர்தல் அதிகாரியான, திரு.லியாகத்அலி அவர்களிடம் கொடுத்துவிட்டதாக தெரிவிக்கிறார். ஆனால் வக்ஃப் கண்காணிப்பாளர்/தேர்தல் அதிகாரி லியாகத்அலி அவர்கள் தன்னிடம் பணத்தினை இதுநாள் வரை ஒப்படைக்கவில்லை என தெரிவிக்கிறார். மேற்படி தொகை ரூ.50,000/– இதுநாள் வரை வக்ஃப் வாரிய கணக்கில் செலுத்தப்படாமல் கையாடல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டிற்கு (1) திரு.அன்வர்தீன், வக்ஃப் ஆய்வாளர், கடலூர் சரகம், கடலூர் மாவட்டம் மற்றும் (2) திரு.லியாகத்அலி, வக்ஃப் கண்காணிப்பாளர்/தேர்தல் அதிகாரி, கடலூர் சரகம் இருவரும் தான் பொறுப்பாவார்கள்.

(2) 2013 ஆம் ஆண்டு திரு.அன்வர்தீன், வக்ஃப் ஆய்வாளர், கடலூர் சரகம், கடலூர் மாவட்டம் என்பவர் கள்ளக்குறிச்சி, ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்த போது, கள்ளக்குறிச்சியில் திரு.முகமது யாசின் என்பவர் நடத்தி வந்த டைல்ஸ் கடையில் தனது சொந்த தேவைக்காக வாங்கிய டைல்ஸ்க்கு தர வேண்டிய ரூ.1,00,000/– பணத்திற்காக கள்ளக்குறிச்சி ஜீம்மா பள்ளிவாசலுக்குரிய வங்கி கணக்கு எண்ணிற்கான காசோலை எண்.647415 மூலம் ரூ.3,00,000/–க்கு Open Cheque கொடுத்துள்ளார். இத்தொகையில் டைல்ஸ்க்கான பணம் தவிர்த்து மீதம் உள்ள பணத்தில், கள்ளக்குறிச்சி, ஜும்மா பள்ளிவாசலின் மராமரத்து பணியை(மரவேலை) மேற்கொண்ட சென்னையை சேர்ந்த திரு.இஸ்மாயில்ஷெரிப் என்பவரின் வங்கி கணக்கில் ரூ.1,00,000/– அனுப்ப செய்தும், ரூ.1,00,000/– பணத்தை நேரடியாக முகமது யாசினிடமிருந்து பெற்று கொண்டுள்ளார் என விசாரணையில் தெரிய வருகிறது. குற்ற அலுவலர் அன்வர்தீன், ஜீம்மா பள்ளிவாசலின் வங்கி காசோலையை முறைகேடாக தனி நபருக்கு அளித்து, அரசின் பணத்தை தனது சொந்த செலவிற்காக பயன்படுத்தியும், அரசுக்கு சொந்தமான பணம் ரூ.2,00,000/– கையாடல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது.

மேற்சொன்ன குற்றச்சாட்டு 1 ல் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டிய ரூ.50,000/– அரசு கணக்கில் செலுத்தப்படாமல் குற்ற அலுவலர்–1 திரு.S.அன்வர்தீன், வக்ஃப் ஆய்வாளர், கடலூர் சரகம், குற்ற அலுவலர்–2 திரு.A.லியாகத் அலி, வக்ஃப் கண்காணிப்பாளர், கடலூர் சரகம் ஆகியோர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பதும், குற்றச்சாட்டு 2 ல் ஜீம்மா பள்ளிவாசலின் வங்கி காசோலையை முறைகேடாக தனி நபருக்கு அளித்து, அரசின் பணத்தை தனது சொந்த செலவிற்காக பயன்படுத்தியும், அரசுக்கு சொந்தமான பணம் ரூ.2,00,000/– குற்ற அலுவலர்–1 திரு.S.அன்வர்தீன், வக்ஃப் ஆய்வாளர் கையாடல் செய்துள்ளார் என தெரியவருகிறது.

எனவே இன்று 28.12.2020ஆம் தேதி 16.00 மணிக்கு, மேற்படி குற்ற அலுவலர்கள் மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.15/2020, சட்டப்பிரிவு 409, 420 IPC & 13(2) r/w 13(a) The Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு), கடலூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

S. Malar
28/12/2020
Inspector of Police,
V&AC, Cuddalore.